ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2459/24- 2025 ඔක්තෝබර් මස 22 වැනි බදාදා - 2025.10.22

2459/24 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை கிராம அலுவலர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

01 ஆந் திருத்தம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2024, யூன் மாதம் 06 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ள 2024, ஒகத்து மாதம் 02 ஆந் திகதிய மற்றும் 2395/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை கிராம அலுவலர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழே காட்டப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் எவ்வித மாற்றங்களுமின்றி அவ்வாறே தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில்,

**டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே. தயாரத்ன,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2025, ஒற்றோபர் 22.

1. நடைமுறைப்படுத்தப்படும் திகதி : இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு 2025 ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

5. சம்பளம்:
5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம்: III, II மற்றும் I ஆந் தரங்கள் GN I - 2025
அதிஉயர் தரம் GN 2 - 2025 (புதிய)


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

5.2 சம்பள அளவுத்திட்டம்: III, II மற்றும் I ஆம் தரங்கள்
ரூபா.50,630-10x540–11x630-10x1,010-10x1,190-84,960
அதிஉயர் தரம் ரூபா. 72,600-10x1,360-18x1,850-119,500

5.3 தர முறைக்கு உரித்தாக ஆரம்ப சம்பள படிமுறை:

GN – 1 – 2025

| *தரம்* | *ஆரம்ப சம்பள படிநிலை* | *ஆரம்ப சம்பள படிமுறை* |
|---|---|---|
| III | ரூபா. 50,630.00 | 01 ஆம் படிமுறை |
| II | ரூபா. 56,660.00 | 12 ஆம் படிமுறை |
| I | ரூபா. 63,970.00 | 23 ஆம் படிமுறை |

GN – 2 (புதிய) – 2025

| *தரம்* | *சம்பள படிநிலை* | *சம்பள படிமுறை* |
|---|---|---|
| உயர்தரம் | ரூபா. 72,600.00 | 01 ஆம் படிமுறை |

6. சேவை வகுதிக்கு உரித்தான பதவி / பதவிகள்:

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவிப்பெயர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை(முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு தரப்பட்டுள்ளது.)

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *பதவி அங்கீகரிக்கப்பட்ட தரம்* | *சம்பளக் குறியீடு* | *அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| கிராம அலுவலர் | இலங்கை கிராம அலுவலர் சேவை I/II/III ஆந் தரம் | GN – 1 - 2025 | 14039 |
| நிர்வாக கிராம அலுவலர் | இலங்கை கிராம அலுவலர் சேவை (அதிஉயர்) | GN – 2 - 2025 (புதிய) | 340 |

10.1.2. பதவியுயர்விற்கான பரீட்சையில் சித்தியடைபவர்களை III ஆந் தரத்திலிருந்து II ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தல்.

i. தரமுயர்த்தும் பரீட்சைக்கு தகைமைகள் கருத்திற் கொள்ளப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறைந்தபட்சம் III ஆந் தரத்தில் 03 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மற்றும் 03 சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ள சேவையில் உறுதிப்படுத்துவதற்கு வேறு வகையில் தகைமையற்றவர்களாக இராத அலுவலர்களுக்கு பதவியுயர்த்தும் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு / தோற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என்பதோடு, தரமுயர்த்தலுக்கான இந்தப் பரீட்சையில் சித்தியெய்துவதற்கு மேலதிகமாக 10.1.2.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

10.1.2.1 கருத்திற் கொள்ளப்படும் தகைமைகள்:

i. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்

ii. சேவை வகுதியின் III ஆந் தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் ஐந்தினை (05) உழைத்திருத்தல்.

iii. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறை ஒழுங்கிற்கு ஏற்ப தரமுயர்த்துவதற்கு முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விடக் கூடிய செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

iv. பகிரங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதற்கு ஒத்திசைவான சுற்றக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி எந்தவொரு ஒழுக்காற்று தண்டனையையும் பெற்றிருத்தலாகாது.

v. உரிய வினைத்திறன்காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

vi. உரிய மட்டத்தில் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

vii. பின்னிணைப்பு 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள தரம் II இற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு

இப்பரீட்சைக்கு ஒரு தடவை மாத்திரமே தோற்ற முடியும்.

18. இடைக்கால ஏற்பாடுகள்

18.1. 2016.09.03 ஆந் திகதி நடைபெற்ற கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இந்த பிரமாணக் குறிப்புத் திருத்தம் வெளியிடப்பட்டதன் பின்னர் நடாத்தப்படுகின்ற II ஆந் தரத்திற்கான தரமுயர்த்தல் பரீட்சையில் சித்தியெய்தும் அலுவலர்கள் பின்வருமாறு II ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

i. தரம் II இற்கு தரமுயர்த்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தும் அலுவலர்கள் 10.1.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்திருப்பின், தரமுயர்த்தல் பரீட்சையில் சித்தியெய்திய திகதி அல்லது தரம் III இல் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள திகதி ஆகிய திகதிகள் இரண்டின் பின்னர் தொடங்கும் திகதியில் இருந்து தரம் II இற்கு தரமுயர்த்தப்படுவார்கள். அவ்வுத்தியோகத்தர்கள் தரமுயர்த்தல் பரீட்சையில் சித்தியெய்திய திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்துள்ள தரம் III இல் ஐந்து (05) வருடத்திற்கு மேற்பட்ட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலமானது தரமுயர்த்தும் செயற்பாட்டிற்காக தரம் II இன் சேவைக் காலமாக கவனத்திற் கொள்ளப்படும்.

18.2. 2007.03.10 ஆந்திகதி மற்றும் 2013.05.04 ஆந்திகதிகளில் நடாத்தப்பட்ட கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களும், இந்த பிரமாண குறிப்புத் திருத்தம் வெளியிடப்பட்டதன் பின்னர் முதற்தடவையாக நடாத்தப்படுகின்ற II ஆந் தரத்திற்கான பதவியுயர்த்தல் பரீட்சைக்கு தோற்ற முடியும். அத்தரமுயர்த்தும் பரீட்சையில் சித்தியெய்தும் தரம் II இல் உள்ள அலுவலர்கள் பின்வருமாறு I ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

i. தரமுயர்த்தல் பரீட்சையில் சித்தியெய்தும் அலுவலர்கள், 10.2.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்திருப்பின், பரீட்சை நடாத்தப்பட்ட திகதி அல்லது தரம் II இல் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள திகதி ஆகிய திகதிகள் இரண்டின் பின்னர் தொடங்கும் திகதியில் இருந்து தரம் I இற்கு தரமுயர்த்தப்படுவார்கள். அவ்வுத்தியோகத்தர்கள் தரமுயர்த்தல் பரீட்சையில் சித்தியெய்திய திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்துள்ள ஐந்து (05) வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலம் உள்ளடங்களாக மொத்த சேவைக் காலம் பதினைந்து (15) வருடங்களுக்கு மேற்பட்ட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலமானது தரமுயர்த்தும் பணிகளுக்காக தரம் I இன் சேவைக் காலமாக கவனத்திற் கொள்ளப்படும்.

பின்னிணைப்பு 08

இலங்கை கிராம அலுவலர் சேவையின் தரம் III இல் உள்ள அலுவலர்களை தரம் II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை

01. பரீட்சைகள் தொடர்பான விபரங்கள்

| | *வினாப் பத்திரம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. | நிறுவன செயற்பாடுகள் மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி முறைமை | 2 மணித்தியாலம் | 100 |
| 2. | கிராம அலுவலர் கடமையுடன் தொடர்புடைய சட்ட திட்டங்கள் தொடர்பான அறிவு | 2 மணித்தியாலம் | 100 |

குறிப்பு

i. அனைத்து விடைத்தாள்களிலும் உள்ள தெளிவற்ற கையெழுத்து மற்றும் எழுத்துப் பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாதவாறு எழுத்துக்களை எழுதியுள்ள பரீட்சார்த்திகள் தகைமை அற்றவர்களாவார்கள்.

ii. சேவையில் இணைவதற்கான போட்டிப் பரீட்சையில் தாம் தோற்றிய மொழி மூலத்திலேயே பரீட்சார்த்திகள் இந்த வினாப் பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

iii. இந்தப் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்துவதற்காக சகல பாடங்களிலும் குறைந்தபட்சப் புள்ளியாக நூற்றுக்கு நாற்பது (40%) இனை மற்றும் இரண்டு பாடங்களிலும் (02) மொத்தப் புள்ளிகள் 100 இற்குக் குறையாது ஒரே பரீட்சையில் (ஒரு தடவையில்) பரீட்சார்த்திகளினால் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02. பரீட்சை நடாத்தும் அதிகாரி: பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் பெயர் குறிப்பிடப்படும் நிறுவனம்.

03. பரீட்சைக்கான விடயப் பரப்பு:

| *வினாத்தாள்* | *விடயப் பரப்பு* |
|---|---|
| 1. நிறுவன செயற்பாடுகள், நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதி முறைமை | அலுவலக நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்துமூல தொடர்பாடல், கோவையிடல் மற்றும் படிவ தயாரிப்பு முதலான விடயத் துறைகள் உள்ளடங்கும் வகையில் அரச அலுவலகங்களில் நடைமுறையிலுள்ள அலுவலக முறைகள் தொடர்பான அறிவு மற்றும் அலுவலக நடவடிக்கைகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்களின் தேர்ச்சியைப் பரீட்சித்தல்.<br><br>பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொகுதி I மற்றும் தாபன விதிக்கோவையின் தொகுதி I இல் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான அறிவினை பரீட்சித்தல்.<br><br>அரசாங்க திணைக்களங்களிலும் மற்றும் அமைச்சு அலுவலகங்களிலும் பயன்பாட்டிலுள்ள நிதிக்கட்டுப்பாடு, நிதிப்பொறுப்புக்கள், வருமானங்களும் கொடுப்பனவுகளும், வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு, வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள், பொருட் சுற்றாய்வு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவையும் புரிதலையும் பரீட்சித்தல்.<br><br>என்பவற்றை நோக்கமாகக் கொண்ட வினாக்களை இந்த வினாப்பத்திரம் கொண்டிருக்கும். |
| 2. கிராம அலுவலர் கடமையுடன் தொடர்புடைய சட்டதிட்டங்கள் தொடர்பான அறிவு | கிராம அலுவலர்களுக்கு பல்வேறு கட்டளைகள் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் பிற அரச நியதிச் சட்ட நிறுவனங்கள் ஊடாக ஒதுக்கப்பட்ட கடமைகள் தொடர்பான அறிவினை பரீட்சிப்பதோடு, அவ் விடயங்களிற்கு உரிய சம்பவங்கள் தொடர்பான விடய ஆய்வுகள்.<br><br>சமகால சமூக நிகழ்வுகளைப் புரிந்து கொண்டு பகுப்பாய்வு செய்யும் திறனை அளவிடுதல்.<br><br>என்பவற்றை நோக்கமாகக் கொண்ட வினாக்களை இந்த வினாப்பத்திரம் கொண்டிருக்கும். |

விடயப் பரப்பு மற்றும் விண்ணப்பிக்கும் முறை தொடர்பான முழுமையான விபரங்களை அறிந்து கொள்வதற்கு நியமிப்புச் செய்யும் அதிகாரியினால் அவ்வப்போது வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல்களின்பால் பரீட்சார்த்திகள் அவதானத்தை செலுத்த வேண்டும்.

EOG 10 - 0225

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.